# WORD OF CHRIST
# (கிறிஸ்துவின் வசனம்)

மரம் 2 கொலோசெயர் 3:16 கனி 5

ஆசிரியர் டிசம்பர் நவம்பர்

சகோ. அர்ச்சுனன் II கொரிந்தியர் 3:6 1993

வாசகர்களுக்கு,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும், சமாதானமும் உண்டாவதாக!

இவ்வருட கடைசி மாதத்திலும் இவ்விதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இதுவரை முகவரியை புதுப்பிக்காதவர்கள் உடனே எழுதி புதுப்பித்துக் கொள்ளுங்கள் இவ்வருடம் முழுவதுமாக வழிநடத்தி வந்த கர்த்தருக்கு நன்றிசெலுத்துங்கள். வருகின்ற புதிய வருடத்தில் புதிய, புதிய தீர்மானங்கள் எடுத்து கர்த்தருக்குள் வளர பிரயாசப்படுங்கள். உங்களுடைய பிராந்திய சபைக்காக பாடுபடுங்கள்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை நம் அனைவரோடுங்கூட இன்றும் என்றும் சதாகாலமும் இருப்பதாக! ஆமென்.

ஆசிரியர்

## THE TALENT GIVEN BY THE LORD
## கர்த்தர் கொடுத்த தாலந்து

அன்பான தேவனுடைய பிள்ளைகளே. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் 25:14-30வசனங்களை வாசிக்கும் போது அங்கே தாலந்தைப் பற்றிய உவமையை சொல்லுகிறார். ஒருவனிடத்தில் ஐந்து தாலந்தும், ஒருவனிடத்தில் இரண்டு தாலந்தும், ஒருவனிடத்தில் ஒரு தாலந்தும், கொடுக்கப்பட்டது ஐந்தை பெற்றுக்கொண்டவன் வேறே ஐந்தையும், இரண்டை பெற்றுக்கொண்டவன் வேறு இரண்டையும் சம்பாதித்தான் ஒன்றை பெற்றுக் கொண்டவன் நிலத்தைத் தோண்டி புதைத்து வைத்து எஜமான் வந்த பொழுது இதோ உம்முடையதை வாங்கிக்கொள்ளும் என்றான். இப்படித்தான் நாமும் நம்முடைய வாழ்க்கையில் ஒரு தாலந்தை வாங்கினவன் செய்தது போல செய்து கொண்டு வருகின்றோம். கர்த்தர் நம் ஒவ்வொருக்கும் அநேக தாலந்துகளைக் கொடுத்திருக்கிறார்,

தேவன் பட்சபாதமுள்ளவர் அல்ல ஒவ்வொருவருக்கும் அவர-வருடைய தேவைக்குத் தகுந்த திறமைகளை கர்த்தர் கொடுத்திருக்கிறார். அதை பயன்படுத்த வேண்டும். நாம் வாழக்கூடிய இடங்களிலே தேவனை அறியாத மக்கள் மத்தியில் நம்முடைய நற்கிரியைகளைக் காட்டவேண்டும். அப்பொழுது தேவன் நமக்குக் கொடுத்த தாலந்து வெளிப்படும் புறஜாதியர்களும் இரட்சிக்கப்படுவதற்கு அது வழியாக இருக்கும். இப்படிப்பட்ட நற்கிரியை நிறைந்த தாலந்தை பயன்படுத்தி அநேக ஆத்மாக்களை சம்பாதிக்கலாம். ஏதாவது ஒரு வகையில் இவ்விதமான சம்பாத்தியத்தை நாம் செய்து கொண்டே-யிருக்க வேண்டும். அப்பொழுது நாம் ஆண்டவருக்குக் கணக்கு கொடுக்கமுடியும்.

நான் பிறந்தது முதல் என் ஆத்துமாவை மட்டும் பாவத்திற்கு விலக்கிக்காத்து வருகிறேன். தேவனிடத்தில் அப்படியே என் ஆத்துமாவை ஒப்புக்கொடுப்பேன் என்று சொல்லுவோமானால் ஒரு தாலந்தை புதைத்துப்போட்ட மனுஷனுக்கு ஒப்பாயிருப்போம். தேவன் நமக்குக் கொடுத்ததை அப்படியே கேட்கவில்லை. அதன் சம்பாத்தியத்தைக் கேட்கிறார். வெறும் கையனாக நம் ஆண்டவரை ஒருக்காலும் சந்திக்க முடியாது. புறம்பான இருளே கிடைக்கும் மேலும் இந்த உவமையில் எஜமான் நீ ஏன் காசுக்காரன் வசத்தில்கொடுக்கவில்லை நான் வந்து வட்டியோடே பெற்றுக் கொள்வேனே என்கிறார். ஆம் நண்பரே! ஒருவேளை உங்களால் ஆத்துமாக்களை சம்பாதிக்க முடியவில்லை என்றால் உங்களை சபைக்கு ஒப்புக் கொடுங்கள். அப்போது உங்கள் கணக்கு பெருகும்.

வருகின்ற புத்தாண்டில் ஒரு தீர்மானம் எடுங்கள். ஒரு சில ஆத்துமாக்களையாவது கிறிஸ்து வண்டை வழி நடத்துங்கள் அல்லது கிறிஸ்துவின் சபையாரோடு சேர்ந்து கிறிஸ்து இயேசுவுக்காக பாடுபடுங்கள். சபைக்கு அநேகரை அழைத்துச் செல்லுங்கள் கர்த்தர் தாமே உங்களை வழி நடத்துவாராக!

---

*நீ தேவனுடைய ராஜ்யத்துக்குத் தூரமானவனல்ல மாற் 12:34*

## O சபை செய்திகள்

அன்பான அழைப்பு: 1993 டிசம்பர் 31-ம் தேதி இரவு 10-00 மணி முதல் 1994 ஜனவரி 1-ம் தேதி காலை 2 மணி வரை ஸ்தோத்திரக்கூட்டம் வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையார் கூடுமிடத்தில் நடைபெறும். கலந்து கொண்டு பயன் பெறுங்கள்.

இறப்பு: மதுரை சகோதரி பேபி பிலேமோன்ராஜ் அவர்களது அக்கா சகோதரி G. காந்திமதி அவர்கள் நவம்பர் 13-ம் தேதி சனிக்கிழமை கர்த்தருக்குள் மரித்து விட்டார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம். இவருடைய குடும்பத்தாருக்காக ஜெபியுங்கள்.

ஜெபக்குறிப்பு: கடந்த நாட்களில் மழையினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக ஜெபியுங்கள்.

## O பரிசு

நவம்பர் மாத வேத அறிவுப்போட்டியில் பரிசு பெறுபவர்கள்.

1. சகோதரி ஜெய அமுதா வத்தலக்குண்டு
2. ,, மேரி எலிசபெத் ,,
3. ,, ஸ்டெல்லா ,,
4. சிறுமி ஜாஸ்மின் ஆரோக்கியமேரி, வத்தலக்குண்டு.
5. சிறுமி அனிதா சொக்கலிங்கபுரம்.

நவம்பர் மாத இதழின் விடைகள்

1. தண்ணீரைப் போல, புலம் 2:19
2. வாரத்தின் முதலாம் நாள் மாற் 16:9
3. தாவீது சங் 71:6
4. கர்த்தருடையது I கொரி 10:26
5. தேவனுடைய I தெச 4:3
6. தேவனுக்கு
7. சாணியையே
8. இந்தச் சந்ததிக்கு
9. புசிப்பும், குடிப்பும் அல்ல
10. ஈசாக்கை

சிறுவர் வேத அறிவுப்போட்டி விடைகள்

1 இயேசு லூக் 1:31
2 கெட்ட லூக் 6:43
3 கேளுங்கள் லூக் 11:9
4 எப்பொழுதும் லூக் 18:1
5 தேவனைப்புகழ்ந்து லூக் 24:53

## O இம்மாத வேத அறிவுப் போட்டி

1. துன்மார்க்கன் தன் கர்வத்தினால் யாரைத் தேடான்?
2. ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் யார்?
3. மனுஷரை கட்டியிருக்கிற என்ன கயிறுகளால் நான் அவர்களை இழுத்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்?

4. ஒரு தாலந்தை வாங்கினவன் என்ன செய்தான்?
5. தாங்கள் சொல்கிறது இன்னதென்றும், தாங்கள் சாதிக்கிறது இன்னதென்றும்அறியாதிருக்கிறவர்கள் யாராய் இருக்க விரும்புகிறார்கள்?
6. ஆண்டவராகிய இயேசுவின் பிறந்த தேதி வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ளதா?
7. உமது பிரமாணங்களை விட்டு வழிவிலகுகிற யாவரையும் மிதித்து போடுகிறீர் அவர்களுடைய உபாயம்வெறும் பொய்யே என்று யார் சொல்வது?
8. வேதத்தைக் கொண்டு போதிக்கிற மனுஷன் எப்படிப்பட்டவன்?
9. நான் அல்பாவும், ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்று யார் திருவுளம் பற்றுகிறார்?
10. தேவன் யாருக்கு எதிர்த்து நிற்கிறார்?

**இம்மாத சிறுவர் வேத அறிவுப் போட்டி**

(யோவான் எழுதின சுவிசேஷத்திலிருந்து)

1. தேவனை ஒருவனும் ......... கண்டதில்லை.
2. நான் உங்களுக்குச்சொல்லுகிற ............ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிறது.
3. என் உபதேசத்தில்........... மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்
4. ஒன்றான மெய் தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் .......... நித்திய ஜீவன்
5. காணாதிருந்தும்..............பாக்கியவான்கள் என்றார்.

மேற்கண்ட கேள்விகளுக்கு வேத ஆதாரத்துடன் இம்மாத இறுதிக்குள் பதில்களை எழுதி அனுப்பவும். பரிசு அனுப்பப்படும்.

உங்கள் ஊரில் கிறிஸ்துவின் சபை ஆரம்பிக்கப்பட வேண்டுமா? இன்றே தொடர்பு கொள்ளவும்

சகோ. **பீட்டர் சாலொமோன்**
கிறிஸ்துவின் ஊழியர், தேசீய வேதாகம கல்லூரி,
13, சாய் நகர், சென்னை-600 082.

இவ்விதழ் இலவசமாக அனுப்படுகிறது.

If Undelivered Please Return To:
**THE EDITOR**
**Word of Christ, Post Box No. 5.**
**BATLAGUNDU-624202. Anna Dt.**

**For Private Circulation only**

Published by Batlagundu church of Christ and
Printed at Shanthi Printers Batlagundu.